விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 036 வள்ளுவர் ஆண்டு 2057 தை 10 சனிக்கிழமை (24.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2026
JANUARY ஜனவரி
23 24 25
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம்
இன்று இரண்டாம் நாள்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

## தமிழீழ வைப்பகத்தில் அடகு வைத்த

# தமிழ் மக்களின் நகைகள் எப்போது கிடைக்கும்?



### சபையில் சிறீதரன் எம்.பி கேள்வி

(கொழும்பு)

தமிழீழ வைப்பகத்தில் அடகு வைத்த தமிழ் மக்களின் நகைகள் எப்போது கிடைக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லா பிரேரணை எங்கே?

### சபையில் பிரதமர் கேள்வி

(கொழும்பு)

எனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை எங்கே? என பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் 15ஆம் பக்கம் பார்க்க

காணாமல் போனோர் தொடர்பில்

## கிளிநொச்சியில் நேற்று விசாரணைகள் ஆரம்பம்



15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சி நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

16ஆவது யாழ்ப்பாண சர்வ தேச வர்த்தகக் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் 15ஆம் பக்கம் பார்க்க

## தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்?

(கொழும்பு)

தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தொழிலாளர் பிரதி அமைச்சர் 15ஆம் பக்கம் பார்க்க

செல்வச்சந்நிதி

## ஆலய சூழலில் சடலம் மீட்பு

(கரணவாய்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் உள்ள மடத்தில் தங்கியிருந்து யாசகம் செய்து வந்த வயோதிபர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை (23) சடலமாக மீட் 15ஆம் பக்கம் பார்க்க

## நாடளாவிய ரீதியில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் போராட்டம்

### நோயாளர்கள் பெரும் சிரமம்

(கொழும்பு)

கொடுப்பனவுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்த போராட்டம் காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

நாட்டிலுள்ள பல பிரதான வைத்திய 15ஆம் பக்கம் பார்க்க

மரியசைனா எங்கள் வரம்

சுவிற்சர்லாந்து நாட்டில் மருத்துவராகி
புலம்பெயர் ஈழத்தமிழினத்துக்குப் பெருமை சேர்த்திருக்கும்
செல்வி மரியசைனா
அவர்கள் இன்று



பரதநாட்டிய அரங்கேற்றம்

காண்கின்றமையை
புளகாங்கிதத்துடன் பாராட்டி
வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்.

யாழ். கரையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு, திருமதி அன்ரனி - யூலியட் தம்பதிகளின் மகளான மரியசைனா, எமது சுவிஸ் இன்பத்தமிழ் பட்டிமன்றக் குழாமின் இளம் தலைமுறைப் பேச்சாளர்களில் முதன்மையான மிகச் சிறந்த பேச்சாளராக வலம் வந்துகொண்டிருக்கிறார்.

மருத்துவராக உயர்ந்து, தாய்மொழியாம் தமிழ் மொழி கற்று அதனை நிறைவாக்கி, தமிழ்ப்பள்ளி ஆசிரியையாகவும் மொழித்தொண்டு ஆற்றி வருகிறார்.



பரதக்கலையை தனது நற்குருவாகிய ராதா
நடனாலய ஆசிரியை முதுகலைமாணி
திருமதி ஞானசுந்தரி வாசனிடம் முறைப்படி
கற்று இன்றைய இன் நன்நாளில் ஆன்றோர்கள்,
சான்றோர்கள் முன்னிலையில் அரங்கேற்றம்
காண்பதை நாமும் அக மகிழ்ந்து, மனதார
வாழ்த்துவதில் மகிழ்வடைகிறோம்.



வாழ்த்துவோர் :-
இன்பத்தமிழ் பட்டிமன்ற குழாம் (சுவிஸ்)
(C-4872)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
பழைய மாணவர் சங்கம்
விசேட பொதுக்கூட்டம் - 2026

காலம் - 08.02.2026
(ஞாயிற்றுக்கிழமை)
நேரம் - மு.ப 09.00 மணி
இடம் - பிரதான மண்டபம்

பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதிபர்,
தலைவர், பழைய மாணவர் சங்கம்,
யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(C-4874)


# இரு குண்டுகள் கிளிநொச்சியில் மீட்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி- பரந்தன் உமையாள்புரம், விளாவோடை பகுதியில் இரண்டு வெடிக்காத குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

விளாவோடை பகுதியில் உள்ள நெல் வயல்சாலையின் அருகே, இரண்டு 60மி.மீ வெடிக்காத குண்டுகள் இருப்பதை அந்தப் பகுதி மக்கள் அவதானித் துள்ளனர்.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி பொலிஸார் குறித்த இடத்தின் பாதுகாப்பை பலப்படுத்தியதுடன் வெடிக்காத இரு குண்டுகளையும் பத்திரமாக அப்புறப்படுத்தினர்.

(ம-7)

## தமிழ் மக்களின்...

பாராளுமன்ற அமர்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மேலும் உரையாற்றிய அவர், இறுதி யுத்தத்தின் போது தமிழீழ வைப்பகத்தில் நகை அடகு வைத்தவர்களின் நகைகளை பெறமுடியவில்லை.

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்ற தேர்தல் காலங்களில் தங்களாலும் தங்கள் உறுப்பினர்களாலும் தமிழீழ வைப்பகத்தில் வைக்கப்பட்ட நகைகளை திருப்பி ஒப்படைப்போம் என பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் முடிந்து ஓராண்டுக்கு மேலாகியும் இது குறித்து எந்த மகிழ்ச்சியான செய்தியும் இதுவரை கிடைக்கவில்லை

தங்களின் பொருளாதாரத்தை இழந்து தவிக்கும் மக்களின் மனநிலையை இந்த அரசு கரிசனையுடன் அக்கறை கொள்ளுமா? என அவர் கேள்வியை முப்பினார்.

தமது நகைகளுக்காக காத்திருக்கும் மக்களின் நகைகள் எப்போது மீண்டும் ஒப்படைக்கப்படும் எனவும் இது குறித்து ஏதேனும் ஒரு வேலைத்திட்டம் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளதா என்றும் சிறீதரன் எம்.பிகேள்வியெழுப்பினார்.

(ம-7)


காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் - அரியாலை ஆனந்தம் வடலி வீதி 3 ஆம் ஒழுங்கை முகப்புடன் 3 பரப்பு 1 குளி காணி விற்பனைக்குண்டு.

- 1 ½ பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நல்ல சூழல், நன்னீரூற்று
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4Km
- A9 வீதியிலிருந்து 400m தூரம்
- வீடு, கடை அமைப்பதற்கு உகந்த இடம்.

076 860 2770
076 987 8617
(1970)

வேலையாள் தேவை

கைதடியில் காணி பராமரிப்பு மற்றும் இதர (மேசன், பிளமிங்) வேலைகள் தெரிந்த பொறுப்பு மிகுந்த ஆர்வமுள்ள வேலையாள் தேவை. தங்கி நின்று வேலை செய்பவர் தேவை. பொருத்தமானவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

சம்பளம் :- 70,000 /= (மாதத்திற்கு)

தொடர்பு:076 791 0168
(6647)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி, சந்தைகள் இறைச்சிக்கடைகள் ஆகியவற்றிற்கான 2026.02.01 - 2026.12.31 வரையான காலப் பகுதிக்குரிய குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக்கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட கீழ்வரும் விபரங்களை கொண்ட சந்தைகள் இறைச்சிக் கடைகளை 2026.02.01 - 2026.12.31 வரையான காலப்பகுதிக்கு ஏலக் கேள்வி விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலக் கேள்வி 2025.09.09, 2025.11.11, 2025.12.17 ஆம் திகதிய தினக்குரல் மற்றும் வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்பட்டுள்ளது.

ஏலக் கேள்வி 2026.01.30 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை 2026.01.30 ஆம் திகதி காலை 10.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.


ஏலக்கேள்வியின் சித்திகர கேள்விதாரர், ஏலத்தொகையின் 1/3 பங்கை உடனடியாக முற்பண வைப்பு பணமாக செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். முற்பண வைப்புப்பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு வழங்கப்படும்.

| இல. | இறைச்சிக் கடைகள் | 2026 ஆம் ஆண்டு ஆகக்குறைந்த ஏலக்கேள்வி தொகை (ரூபா.) ( 2026.02.01 – 2026.12.31 வரை ) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (1%) (ரூபா.) |
|---|---|---|---|
| 01 | நெல்லியடி சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 42,400.00 | 424.00 |
| 02 | உடுப்பிட்டி சந்தை கோழியிறைச்சிக் கடை | 186,700.00 | 1,867.00 |
| 03 | நவிண்டில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 64,700.00 | 647.00 |
| 04 | கோயிற்சந்தை கோழியிறைச்சிக் கடை | 266,900.00 | 2,669.00 |
| 05 | கோயிற்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 297,000.00 | 2,970.00 |
| 06 | கோட்டடி சந்தை | 361,300.00 | 3,613.00 |
| 07 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 47,100.00 | 471.00 |

குமாரசாமி சுரேந்திரன்,
தலைவர்,
கேள்விச்சபை,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
(C-4871) 2026.01.24

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 - 06 - 1947



மறைவு
23 - 01 - 2026

### சுப்பிரமணியம் கனகலிங்கம்

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் கனகலிங்கம் அவர்கள் நேற்று (23.01.2026) வெள்ளிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - ராசம்மா தம்பதியரின் மூத்த புத்திரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்பு கணவரும் இராஜன்(அமரர்), இராயுதன், கயுராஜ், சுபராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மிருதுளா, கவிதா, சிந்துஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டினேசியன், சஜானா, லதுர்சன், ஹர்ஷயன், ஹேஷித், றக்சயன், அஷ்வந்த் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் இந்திராதேவி, கமலக்குமாரி, சந்திராதேவி, சசிகலாதேவி, நிர்மலாதேவி, நிர்மலதேவன், புவிராசசிங்கம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான நடராசா, காலஞ்சென்ற குமார், காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற சிவக்கொழுந்து, காலஞ்சென்ற அன்னலட்சுமி, காலஞ்சென்ற தனபாலு மற்றும் பரமேஸ்வரி ஆகியேரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (25.01.2026) காலை 09.00 - 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுபராஜ் - 077 959 9393
யுகன் - 077 912 2660
[illegible] 041.7757

தகவல்:
குடும்பத்தினர்
(6648)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகளுடன் கைகோர்த்த அரசியல்வாதிகளும் தப்ப முடியாது!

## நீதி அமைச்சர் எச்சரிக்கை



(கொழும்பு)

**தேசிய மக்கள் சக்தி ஆட்சியில், பாதாள உலகக் குழுக்களுக்கும் போதைப் பொருள் வர்த்தகர்களுக்கும் அடியோடு முடிவு கட்டப்படும். மேலும் குற்றவாளிகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

நாட்டில் சட்டத்தின் ஆட்சி உறுதி யாக நிலைநிறுத்தப்படும் என்றும், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வித தளர்வும் வழங்கப்படமாட்டாது என்றும் ஊடகங்களிடம் அவர் குறிப்பிட்டார்.

நீதி அமைச்சின் கீழ் செயற்படும் சட்ட அமுலாக்க அமைப்புகள் மேலும் பலப்படுத்தப்படவுள்ளதுடன், குற்றவாளிகளைப் பாதுகாக்கும் எந்தவொரு சக்தியும் இனி செயற்பட முடியாத நிலை உருவாக்கப்படும் என்றும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசியல் அதிகாரம், செல்வாக்கு அல்லது பதவி ஆகியவற்றை காரணமாகக் கொண்டு எவரும் சட்டத்தி லிருந்து தப்ப முடியாது என்றும் அவர் எச்சரித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசு, ஊழல், குற்றச்செயல்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும், மக்களின் பாதுகாப்பும் நியாயமும்தான் அரசின் முதன்மை நோக்கம் என்றும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகள் மூலம் நாட்டில் நம்பிக்கையுடனான சமூக சூழல் உருவாகும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (நி)

# போதைப்பொருள் பாவனை சிக்கிய 10 சாரதிகள்

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு பயணிகளின் உயிரைப் பணையம் வைத்து பேருந்துகளைச் செலுத்தும் சாரதிகளைக் கண்டறியும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

கொழும்பு பெஸ்டியன் மாவத்தை தனியார் பேருந்து நிலையத்தில் கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட இந்தச் சோதனையில், போதைப்பொருள் பயன்படுத்திய 10 சாரதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேனவின் நேரடி மேற்பார்வையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சோதனையின் போது அங்கிருந்த நபர்கள் மற்றும் பணியிலிருந்த 56 சாரதிகள் உள்ளிட்டவர்கள் (சீரற்ற) முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறுநீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதில் 10 சாரதிகள் போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் ஐஸ், ஹெரோயின் மற்றும் கஞ்சா போன்ற ஆபத்தான போதைப்பொருட்களைப் பயன்படுத்தியிருப்பது ஆரம்பகட்ட சோதனையில் தெரியவந்துள்ளது.

சாரதிகள் போதையில் வாகனம் ஓட்டுவதை அவதானித்தால் பயணிகள் உடனடியாக அறிவிக்க வேண்டும்.

பேருந்து உரிமையாளர்கள் தமது ஊழியர்களின் நடத்தையில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அடையாளம் காணப்பட்ட 10 சாரதிகளுக்கும் எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், அவர்களின் சாரதி அனுமதிப் பத்திரத்தை ரத்து செய்யவும் பரிந்துரைக்கப்படும்.

மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திடீர் சோதனைகள், இனிவரும் காலங்களில் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் முன்னறிவிப்பின்றித் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## சீனாவிடமிருந்து 100 பேருந்துகள்

(கொழும்பு)

இலங்கைக்கு 100 நவீன சொகுசு மின்சார பேருந்துகளை விரைவாக வழங்குவதற்கு சீனா நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஷென்ஹொங் தெரிவித்துள்ளார்.


எரிபொருள் பயன்பாட்டினால் ஏற்படும் பாரிய சுற்றுச் சூழல் மாசடைவைக் குறைக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு வழங்கப்படத் திட்டமிடப்பட்டுள்ள ஒரு பேருந்தின் விலை சுமார் 2,25,000 அமெரிக்க டொலர்கள் எனத் தூதுவர் மேலும் தெரிவித்தார். (நி)

# இலங்கையின் நிலையான வளர்ச்சிக்கு ஆசிய வங்கி தொடர்ந்து ஆதரவளிக்கும்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்து நாட்டின் பொருளாதார நிலவரங்கள் குறித்துக் கலந்துரையாடியுள்ளார்.



இலங்கையின் தற்போதைய பொருளாதார சவால்கள், எதிர்கால வாய்ப்புகள் மற்றும் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, இலங்கையின் பொருளாதார மீட்சிக்காகவும், நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கக்கூடிய ஆதரவுகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. இந்தச் சந்திப்பு குறித்து மஹிந்த சிறிவர்தன தனது எக்ஸ் தளத்தில் பொருளாதார சவால்களை எதிர்கொள்வது மற்றும் நெகிழ்ச்சித்திறனை அதிகரிப்பது தொடர்பாக ஜனாதிபதியுடன் பயனுள்ள பேச்சுவார்த்தைகளை நடத்தினேன்.

இலங்கையின் நிலையான வளர்ச்சிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த சிறிவர்தன 2025 ஜூன் வரை இலங்கையின் திறைசேரிச் செயலாளராகப் பணியாற்றியிருந்தார்.

அவரது ஓய்வுக்குப் பின்னர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளராக அவர் பதவியேற்றார். (நி)

## ஜோன்ஸ்டனுக்கு மீண்டும் விளக்கமறியல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அவரது இரண்டு மகன்கள் உட்பட 5 சந்தேகநபர்களையும் ஜனவரி 30 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் வத்தளை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட போதே, இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில், சதொச நிறுவனத்திற்குச் சொந்தமான லொறி ஒன்றை முறைக்கேடாக பயன்படுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வெளிநாடு செல்ல அனுமதி

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத் தடையைத் தற்காலிகமாக தளர்த்துவதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று கொழும்பு மேலதிக நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது, சந்தேக நபரான பிரசன்ன ரணதுங்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா, தனது கட்சிக்காரர் மத வழிபாட்டு நடவடிக்கைக்காக இந்தியா செல்ல வேண்டியுள்ளதால், தற்போது நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத்தடையைத் தற்காலிகமாகத் தளர்த்துமாறு கோரிக்கை விடுத்தார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு சார்பில் ஆஜரான அதன் உதவி பணிப்பாளர் நாயகம் சுலோச்சனா ஹெட்டியாராச்சி, இந்த கோரிக்கைக்கு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் உடன்படவில்லை என நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

[illegible] பரிசீலித்த நீதவான், அடுத்த வழக்குத் தவணை வரை பிரசன்ன ரணதுங்க வெளிநாடு செல்வதற்காக விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி உத்தரவிட்டார்.



அதற்கு மேலதிகமாக, பிரசன்ன ரணதுங்கவிற்கு 50 இலட்சம் ரூபாய் மேலதிக சரீரப் பிணை விதித்ததுடன், அவரது பிணையாக இருப்பவர்களின் வெளிநாட்டு பயணங்களைத் தடை செய்யவும் உத்தரவிட்டார். இந்த வழக்கு விசாரணை மார்ச் மாதம் 27ஆம் திகதி வரை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. சுற்றுலா அமைச்சின் கீழ் உள்ள 4 நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட நேரடி மருத்துவக் காப்பீட்டிற்காக, சட்டவிரோதமான முறையில் தனியார் தரகர் நிறுவனம் ஒன்றை நியமித்து, அதன் மூலம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு 4,750,828.72 ரூபாய் நட்டம் ஏற்படுத்தியமை தொடர்பாக முன்னாள் அமைச்சருக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி - 2026

JITF 2026
16TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR











யாழ்.
சர்வதேச வர்த்தகக்
கண்காட்சி முற்றவெளி
மைதானத்தில் நேற்று
வெள்ளிக்கிழமை
ஆரம்பமாகியது.















படங்கள்: சிவசாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஆட்சியை கவிழ்க்க எதிரணிக்கு திராணியில்லை

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு



(கொழும்பு)

எமது ஆட்சியை எந்த வகையிலும் எதிரணிகளால் கவிழ்க்க முடியாது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியாகத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு மக்கள் ஆதரவு தொடர்ச்சியாக வலுப்பெற்று வருகின்றது என்றும், அதனால் அரசியல் ரீதியான எந்தச் சவாலையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என்றும் ஊடகங்களிடம் அவர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசு நாட்டின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களைப் பொறுப்புடன் முன்னெடுத்து வருகின்றது.

கடந்த கால ஆட்சிகளால் உருவாக்கப்பட்ட நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காகத் தற்போதைய அரசு திடமான முடிவுகளை எடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எதிரணிகள் இந்த அரசை நிலையற்றதாக காட்ட முயற்சிக்கின்றன, அவை அனைத்தும் அரசியல் இலாபத்துக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளே என்றும் குறிப்பிட்டார்.

மக்கள் உண்மையைப் புரிந்து கொண்டுள்ளதால், இவ்வாறான முயற்சிகள் எதுவும் வெற்றியடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றிவாகை சூடும். நாட்டு மக்கள் அரசின் செயற்பாடுகளை நேரடியாக அனுபவித்து வருவதால், மீண்டும் வலுவான ஆதரவை வழங்குவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஊழல் அரசியலை முற்றாக ஒழிப்பதே தேசிய மக்கள் சக்தியின் பிரதான இலக்கு, அதற்காக எந்த அரசியல் அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# அனுஷ பெல்பிட்டவுக்கு விளக்கமறியல் உத்தரவு

(கொழும்பு)

இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவினால் நேற்று கைது செய்யப்பட்ட அமைச்சின் முன்னாள் செயலாளரும் பணிப்பாளர் நாயகமுமான அனுஷ பெல்பிட்டவுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நான்கு கோடியே அறுபது இலட்சம் (46 மில்லியன்) ரூபாய் பணத்தை ஈட்டிய முறையை வெளிப்படுத்தத் தவறியமை தொடர்பில் நேற்று காலை அவர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவினால் கைது செய்யப்பட்ட நிலையில் பெப்ரவரி 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி)



சமூக ஒற்றுமைக்கான பொறுப்பான டிஜிற்றல் சமூகம் எனும் திட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்களுக்கான ஒருநாள் பயிற்சி நெறி UNICEF நிதியுதவியுடன் SOND நிறுவனத்தால் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. (படம்: சுபேசன்)

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு வலம்புரி நாளிதழ் நடத்தும்

## பொது அறிவுப் போட்டி - 2026

**நிபந்தனைகள்**

- ♦ வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.
- ♦ போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவருகின்ற பொது அறிவு வினாக்களுக்கு அந்தப் படிவத்திலேயே விடையளிக்க வேண்டும்.
- ♦ 2026 ஜனவரி 23, 24, 25, 26, 27 ஆகிய ஐந்து நாட்களில் ஒவ்வொரு நாளும் பத்துக் கேள்விகளாக, மொத்தம் 50 கேள்விகளுக்கு விடையளித்து அவற்றை ஒன்றாகச் சேர்த்து **வலம்புரி, இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு சாதாரண தபாலிலோ அன்றி நேரிலோ ஒப்படைக்க வேண்டும்.
- ♦ தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பொது அறிவுப் போட்டி - 2026 எனக் குறிப்பிடவும்.

**முடிவு திகதி: 03.02.2026**

**பரிசு விபரம்**

- ❖ போட்டியில் 50 வினாக்களுக்கும் சரியான விடை அளித்தவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக இருக்கும் பட்சத்தில், குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்.
- ❖ சரியான விடையெழுதியவர்களின் பெயர் விபரம் வலம்புரியில் வெளிவரும்.

- **முதல் பரிசு : 10, 000/=**
- **இரண்டாம் பரிசு : 7, 500/=**
- **மூன்றாம் பரிசு : 5, 000/=**
- **2000/= 10 ஆறுதல் பரிசுகள்**

---

**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு வலம்புரி நாளிதழ் நடத்தும் பொதுஅறிவுப் போட்டி - 2026**

பொது அறிவுப் போட்டி - 02

11. இலங்கையில் முதன்முதலில் வெளிவந்த தமிழ் பத்திரிகை எது? அது ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?

.......................................................................

12. "ஈழத்துச் சிங்கம்" என அழைக்கப்பட்ட தமிழ்த் தலைவர் யார்?

.......................................................................

13. வலம்புரி நாளிதழ் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

.......................................................................

14. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

.......................................................................

15. யாழ்ப்பாண வைபவமாலை நூலை எழுதியவர் யார்?

.......................................................................

16. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முதலாவது அதிபரின் பெயர்?

.......................................................................

17. விண்வெளி பயணத்தில் சில தடைகளை எதிர்கொண்டு மீளவும் அண்மையில் பூமிக்குத் திரும்பிய விண்வெளி ஆய்வாளர்களின் பெயர்கள்?

.......................................................................

18. இந்தியாவின் தற்போதைய குடியரசுத் தலைவர் யார்?

.......................................................................

19. பின்னோக்கி பறக்கும் பறவை எது?

.......................................................................

20. சர்வதேச யோகா தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?

.......................................................................

போட்டியாளரின் முழுப்பெயர்: .......................................................

விலாசம்: .......................................................................

பிறந்த திகதி: .......................................................................

தொலைபேசி இலக்கம்: .......................................................

..................... .....................

திகதி: ஒப்பம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் டித்வா புயலால் சேதமடைந்த வழிபாட்டுத் தலங்களுக்கு நிதி வழங்கி வைப்பு



(மன்னார்)

கடந்த வருடம் ஏற்பட்ட டித்வா புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தால் மன்னார் மாவட்டத்தில் சேதமடைந்த வழிபாட்டு தலங்களுக்கு, முதல் கட்டமாக மன்னார் மாவட்ட செயலகத்தில் வைத்து அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நிதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் 42 இந்து ஆலயங்கள், 17 கிறிஸ்தவ ஆலயங்கள், 6 பள்ளிவாசல்கள் என 65 வழிபாட்டு தலங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் நிவாரண கொடுப்பனவுகள் முதற் கட்டமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று மூன்று பௌத்த விகாரைகளுக்கு நிவாரண கொடுப்பனவுகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர் கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் கோயில் நிர்வாகத்தினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (3-285)

# கட்டடத் திறப்பு விழா

(கரணவாய்)

மீசாலை வடக்கு நகுலன் சனசமூக நிலையம் மற்றும் நளினி முன்பள்ளி ஆகிய கட்டடங்களின் திறப்பு விழா இன்று சனிக் கிழமை காலை 9 மணி யளவில் இடம் பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் மகாலிங்கம் மதுசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் விருந்தினர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (8-60)

# அறிவுத் திருக்கோவிலில் யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக் கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மன வளக்கலை பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சர்க்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தபட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளியமுறை உடற் பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இரு பாலரும் பங்குபெறலாம்.

பயிற்சிகளைத் தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே. ஆர் முனிரத்தினம் வழங்குவார்கள்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)



யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திலிருந்து காலி சிவன் ஆலயம் வரையான புனித திருத்தல தரிசன யாத்திரை நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு ஆரம்பமாகியது.

(படம்-சிவசாந்தன்)

# யாழ். உயரப்புலம் வீதி உயிரைக் குடிக்கும் வீதியா?

## பிரதேச சபையில் சுட்டிக்காட்டு

(அராலி)

உயரப்புலம் வீதி புனரமைக்கப்படாத காரணத்தால் நான்கு உயிர்கள் பறிபோனதாக மானிப்பாய் பிரதேச சபையின் நேற்றைய அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டது.

இது குறித்து உறுப்பினர்களான அச்சுதபாயன் மற்றும் எட்வெட் மரியவாசினி ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில்,

உயரப்புலம் வீதியானது நீண்ட காலமாக புனரமைக்காத நிலையில் காணப்படுகிறது. அந்த வீதியால் நோயாளர் காவு வண்டிகள் கூட செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. குறித்த வீதியால் நோயாளர் காவு வண்டி வரமுடியாததால் இது வரை நான்கு உயிர்கள் பலியாகி உள்ளன. இன்னமும் எத்தனை உயிர்கள் பறிபோன பின்னர் அந்த வீதியை புனரமைப்பீர்கள்?

எனவே விரைவாக அந்த வீதியை புனரமையுங்கள் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது குறித்து தவிசாளர் ஜெதீதன் கருத்து தெரிவிக்கையில், வீதிகள் புனரமைப்புக்கு வரையறுக்கப்பட்ட நிதியே எமக்கு கிடைக்கிறது. இயன்ற அளவு நாங்கள் வீதி அபிவிருத்திகளை செய்கின்றோம். பிரச்சினைகளுக்குரிய வீதிகள் தொடர்பான விபரங்களை வழங்குங்கள். விசேட நிதிகள் ஏதாவது கிடைக்கும் பட்சத்தில் அவற்றை நாங்கள் புனரமைப்போம் எனத் தெரிவித்திருந்தார். (3)

# யாழில் மூடப்படும் வீதி

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு வல்லை துன்னாலை வீதியில் (B417) உள்ள பாலம் புனரமைப்பு செய்ய உள்ளதால், யாக்கரை சந்திக்கும் (தொண்டமனாறு வல்லை துன்னாலை வீதி மற்றும் சாவகச்சேரி புலோலி வீதி), முள்ளி சந்திக்கும் (தொண்டமனாறு வல்லை துன்னாலை வீதி மற்றும் புலோலி கொடிகாமம் கச்சாய் வீதி) இடையேயான வீதிப்போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இப்புனரமைப்பு பணிகள் 3 மாதங்கள் நடைபெறவுள்ளதால் மாற்றுப்பாதையான சாவகச்சேரி புலோலி வீதி மற்றும் அல்வாய் நெல்லியடி துன்னாலை வீதி என்பவற்றைப் பயன்படுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அறிவித்துள்ளனர். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 300 | 350 | 300 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 160 | 200 | -- | -- |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 600 | 500 | 600 | 450 |
| தக்காளி | 600 | 450 | 500 | 500 | 450 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 150 | 200 | 100 |
| கோவா | 250 | 250 | 300 | 300 | 280 | 220 |
| கரட் | 400 | 400 | 300 | 500 | 450 | 350 |
| பூசணி | 100 | 120 | 120 | 150 | 120 | 70 |
| புடோல் | 250 | 200 | 300 | 300 | 300 | 250 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 200 | 150 | 140 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 400 | 150 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 200 | 200 | 180 | -- |
| பாகற்காய் | 600 | 600 | 600 | 800 | 500 | 550 |
| வெண்டக்காய் | 200 | 400 | 400 | 500 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 300 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 650 | 800 | 800 | 600 | 900 | 500 |
| லீக்ஸ் | 350 | 450 | 300 | 600 | 450 | 350 |
| பீற்றூட் | 400 | 500 | 500 | 600 | 500 | 500 |
| கறிமிளகாய் | 900 | 700 | 700 | 800 | 700 | 650 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 500 | 500 | 500 | 600 | 450 | 450 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 300 | 300 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 60-140 | 250 | 120 | -- | 170 |
| தேசிக்காய் | 300 | 150 | 200 | 200 | 300 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 180 | 150 | 100-150 | -- | 120 |
| இராசவள்ளி | 600 | 500 | 400 | 500 | -- | 450 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 600 | 600 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 160 | 200 | 300 | 200 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 80 | -- | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 150 | -- | 90 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இலங்கையை மீளக் கட்டியெழுப்புதல்'
# திட்டத்திற்கு 8.5 பில்லியன் ரூபா நிதியுதவி
## நிதி அமைச்சர் தகவல்



(கொழும்பு)

**இலங்கையிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொது மக்களால் "இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பு தல்" திட்டத்திற்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள நிதிப் பங்களிப்பு 8.5 பில்லியன் ரூபாவையும் கடந்துள்ளது என நிதி அமைச்சின் செயலாளர் ஹர்சன சூரியப் பெரும தெரிவித்தார்.**

சுனாமிக்கு பிந்தைய மீள் கட் டமைப்பு போன்றே, இந்தச் சூறா வளி அனர்த்தத்தின் பின்னரும் சர்வதேச நாடுகள் இலங்கைக்குப் பெரும் ஆதரவை வழங்கியுள் ளன. வெளி நாடுகளிலிருந்து இது வரை 9.49 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக நிதி கிடைத்துள்ளது. இதில் அதி கூடிய நிதிப்பங்களிப்பை அமெரிக்கா வழங்கியுள்ளதுடன், அந்தத் தொகை ஒரு பில்லியன் ரூபாவையும் தாண்டியுள்ளது. இலங்கைக்கு அதிகளவில் நிதியுதவி வழங்கிய நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவிற்கு அடுத்ததாக அவுஸ்திரேலியா, சீனா, இங்கிலாந்து, ஜேர்மனி, கனடா, சவுதி அரே பியா, ஐக்கிய அரபு அமீரகம், பூட்டான், இத்தாலி, தென் கொரியா உள்ளிட்ட 47 நாடுகள் நிதி மற்றும் உதவிகளை வழங்கியுள்ளன.

நிதி உதவிகளுக்கு மேலதிகமாக, பெருமளவிலான நிவாரணப் பொருட்கள் இலங்கை சுங்கத்திற்கு வந்து சேர்ந்துள்ளன. இவ்வாறு கிடைத்துள்ள பொருட்களின் மொத்தப் பெறுமதி 2.3 பில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதியானது மிகவும் வெளிப்படையான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருவதாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளைக் கட்டியெழுப்புவதற்கும் உட்கட் டமைப்பு வசதிகளைச் சீரமைப் பதற்கும் முன்னுரிமை அளிக்கப் படும் என்றும் நிதி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (நி)

# எம்.பிக்களின் ஓய்வூதியத்தை ரத்து செய்யாதீர்கள்
## ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிய கரு

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வது தொடர்பில் முன்னாள் சபாநாய கர் கரு ஜயசூரிய, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கத்தின் காப்பாளர் என்ற ரீதியில் எழுதப்பட்டுள்ள இக்கடிதத்தில், ஓய்வூதியம் என்பது ஒரு சலுகை மட்டுமல்ல, அது சாதாரண மக்கள் அரசியலுக்கு வருவதற்கான ஒரு பாதுகாப்பு என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஓய்வூதியம் இரத்துச் செய்யப்பட்டால், அது சமூகத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என அவர் தனது கடிதத்தில் எச்சரித்துள்ளார். அரசியல் என்பது மீண்டும் செல்வந்தர்கள், பெரும் தொழிலதிபர்கள் மற்றும் முறையற்ற வழிகளில் பணம் ஈட்டுபவர்களுக்கு மட்டுமேயான ஒரு களமாக மாறிவிடும்.

தமது சொத்துக்களை விற்று மக்கள் சேவைக்கு வரும் நேர்மையான அரசியல்வாதிகள், தமது முதுமைக் காலத்தில் வாழ்வாதாரம் இன்றித் தவிக்கும் நிலை ஏற்படும். இது நேர்மையானவர்கள் அரசிய லுக்கு வருவதைத் தடுக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தன்னைப் போன்ற ஒரு சிலர் இந்த ஓய்வூதியத்தைப் புண்ணிய காரியங்களுக்குப் பயன்படுத்தினாலும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மை யானவர்கள் தங்களது அன் றாட வாழ்க்கையை இந்த ஓய்வூதியத்தைக் கொண்டே கழிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் தற்போது புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முதற்கட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

எனவே, இந்த புதிய அரசியலமைப்புத் திருத்தத்தின் போது, பாராளுமன்ற உறுப் பினர்களின் ஓய்வூதிய விவகாரத்தில் அவசரமான முடிவுகளை எடுக்காது, ஜனநாயகத்தையும் சாதாரண மக்களின் பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்கக்கூடிய வகையில் ஒரு நடுநிலையான தீர்வை எட்ட வேண்டும் என கரு ஜய சூரிய ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டுள்ளார். (நி)

# ஆதன உரிமை பெயர் மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை :- தெல்லிப்பளை உப அலுவலகம்

உரிமையாளர் பெயர் :- செல்வரத்தினம் செல்வகுமார்

விண்ணப்பதாரர் பெயர் :- செல்வரத்தினம் செல்வகுமார்

முகவரி :- முத்துமாரியம்மன் கோவிலடி தவளக்கிரி.

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 11, நகுலேஸ்வரம் கருகம்பனை வீதியில் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 04.05.2020 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் சோமசுந்தரம் தேவராஜா அவர்கள் முகதாவில் இலக்கம் 8964 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதி மூலம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.
மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் இ.ராமச்சந்திரன் அவர்களால் அளந்து வரைந்த 3932 இலக்க 07.05.2011 திகதிய நில அளவைப்படத்தில் துண்டு - 4 என காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று, அளவெட்டி இறை வலிகாமம் வடக்கு பிரதேச சபை, வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம், J/224, பன்னாலை கிராம சேவகர் பிரிவு: நிலப்பரப்பு இரண்டு (நி.ப 2ஆம்) இதற்கு எல்லைகள்

கிழக்கு :- தனபாலசிங்கம் பெண் மல்லிகாதேவியின் ஆதனம்

வடக்கு :- கே.கந்தையாவின் ஆதனமும்

மேற்கு :- குறித்த படத்தில் துண்டு 1 எனச்சுட்டிய ஆதனமும் குறித்த படத்தில் துண்டு 4 எனச்சுட்டிய பாதையும்


தெற்கு :- குறித்த படத்தில் துண்டு 3 எனச் சுட்டிய ஆதனமும்

மேற்குறித்த ஆதனத்தை செல்வரத்தினம் செல்வகுமார் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 07 - 1935 | 22 - 01 - 2026 |



# செல்லர் சின்னத்துரை
## (ஓய்வு நிலை ஆசிரியர்)

நெல்லியடி மகாத்மா வீதி ஐயனார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சின்னத்துரை அவர்கள் 22.01.2026 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர்-லக்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசா, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோதிமுத்து அவர்களின் அன்புக்கணவரும், கெங்காராணி(வனிதா-ஜேர்மனி), சக்திராணி, குணராணி(ஜேர்மனி), மேகலராணி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தம் (பாபு-ஜேர்மனி), நல்லைநாதன், பாஸ்கர் (ஜேர்மனி), சதீஸ்குமார்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தவனம் மற்றும் காலஞ்சென்றவர்களான சண்முகம், முருகேசு, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிந்துஜா, நிரோஜன், சவீதா, தாரிகா, தானுஜன், விதுஷா, பாணுஜன், நிலானி, சாமிலா, மகாஷ், முகேஷ் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.01.2026 நாளை ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மகாத்மா வீதி, ஐயனார் கோயிலடி,**
**நெல்லியடி.**


**தகவல் :- குடும்பத்தினர்.**
**077 272 1216, 076 693 2598**

(C-4869)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து வெளியேறியது அமெரிக்கா




(வோஷிங்டன்)

உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து அமெரிக்கா நேற்று வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக வெளியேறியது. இது உலகளாவிய ரீதியிலும் அமெரிக்காவிலும் சுகாதாரப் பாதுகாப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 2025 ஆம் ஆண்டில் தனது பதவிக்காலத்தின் முதல் நாளிலேயே, ஒரு நிர்வாக உத்தரவின் மூலம் உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து தாம் விலகப் போவதாக அறிவித்தார்.

அமெரிக்கச் சட்டப்படி, விலகுவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னரே அறிவிக்க வேண்டும் மற்றும் நிலுவையில் உள்ள அனைத்துக் கட்டணங்களையும் செலுத்த வேண்டும்.

அமெரிக்கா செலுத்த வேண்டிய 260 மில்லியன் டொலர் நிலுவைத் தொகையை வழங்காமல் விலகுவது சட்ட மீறல் என்று சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் தோல்வியடைந்ததால் அமெரிக்காவிற்கு டிரில்லியன் கணக்கான டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறி, நிதி வழங்கலை நிறுத்துவதாக அமெரிக்க வெளிவிவகாரத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா வெளியேறுவதால் உலக சுகாதார ஸ்தாபனம் தனது முகாமைத்துவக் குழுவைப் பாதியாகக் குறைத்துள்ளதுடன், இந்த ஆண்டு நடுப்பகுதிக்குள் கால்வாசி ஊழியர்களைப் பணி நீக்கம் செய்யவுள்ளது.

"அமெரிக்கா தனது தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்து மீண்டும் இணைய வேண்டும். இந்த வெளியேற்றம் அமெரிக்காவிற்கும் உலகிற்கும் ஒரு இழப்பு" என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைமை பணிப்பாளர் வைத்தியர் டெட்ரொஸ் அதனொம் கேப்ரியஸஸ் தெரிவித்துள்ளார். (நி)



# ஈரானுக்குச் செல்லும்

# அச்சத்தில் உல

**(வோஷிங்டன்)** ஈரானை நோக்கி ஒரு பிரம்மாண்டமான அமெரிக்கக் கடற்படை சென்று கொண்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



அதை பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது என்று நம்புகிறேன் என டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே நிலவி வரும் போர் பதற்றத்துக்கு மத்தியில் அமெரிக்கக் கடற்படை சென்று கொண்டிருப்பதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் இந்த நகர்வை உலக நாடுகள் அச்சத்துடன் உற்று நோக்குவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரான் நாட்டின் நிதி நிலைமை மோசமாகி பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் "முல்லா கண்டிப்பாக போ" என்ற கோஷத்துடன் ஈரானின் உயர்மட்ட தலைவர் அயதுல்லா அலி கமேனிக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த போராட்டத்துக்கு ஈரானின் பரமஎதிரிகளாக உள்ள இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஈரானில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் 3,117 பேர் உ... படுகிறது...

ஆர்ப்... எண்ணி... முதல் அ... அமைந்...

நேற்... தாக்கு த... சக்தியுட...

## ஜம்மு-காஷ்மீரில் பள்ளத்தில் கவிழ்ந்த வாகனம்

### 10 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு

(காஷ்மீர்)

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் தோடா மாவட்டத்தில் உள்ள படேர்வா பகுதியில் 200 அடி ஆழமுள்ள பள்ளத்தாக்கில் இராணுவ வாகனம் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சுமார் 10 இராணுவ வீரர்கள் உயிரிழந்ததுடன், ஏழு பேர் காயமடைந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மொத்தம் 17 வீரர்களை ஏற்றிச் சென்ற இராணுவ வாகனம், உயரமான ஒரு பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, அதன் சாரதி கட்டுப்பாட்டை இழந்ததன் காரணமாக 200 அடி ஆழமான பள்ளத்தாக்கில் கவிழ்ந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இராணுவமும் ஜம்மு காஷ்மீர் பொலிஸ்துறையும் இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (நி)



## பார... ஜப்...

(போ...

ஜப்பா... மரான ... வெள்ளி... ளுமன்ற... உத்தர... னைத் ... 8ஆம் ... தேர்தல் ...

பதவி... களில், ... தகாய்ச் ... சபையை... செல்வா... ஆளுங்க... கவும் அ... எடுத்துள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கக் கடற்படை
# லக நாடுகள்!



ர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் டுகிறது.

ஆர்ப்பாட்டங்களில் உயிரிழந்தோர் ண்ணிக்கை குறித்து வெளியிடப்பட்ட தல் அதிகாரபூர்வ அறிவிப்பாக இது மைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஈரான் மீது ஏதேனும் க்கு தல் நடத்தப்பட்டால், அதற்கு முழு தியுடன் பதிலடி கொடுக்கப்படும் என ஈரானின் வெளி யுறவு அமைச்சர் முதன்முறையாக அமெரிக்காவுக்கு நேரடி மிரட்டல் விடுத்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில், எதிர்வரும் நாட்களில் விமானம் தாங்கி போர்க்கப்பல், பல ஏவுகணை அழிக்கும் போர்க் கப்பல்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லுமெனவும் கூடுதல் வான் பாதுகாப்பு அமைப்புகள் தொடர்பில் பரசீலிக்கப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## காசா அமைதி வாரியம்
## சர்வதேச அமைப்பாக மாற்றம்




(டாவோஸ்)

காசாவின் புனரமைப்பு பணிக்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பால் அறிவிக்கப்பட்ட, காசா அமைதி வாரியம், தற்போது சர்வதேச அமைதி வாரியமாக மாறியுள்ளது.

மேற்காசிய நாடான இஸ்ரேல் மற்றும் காசாவைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையே, இரண்டு ஆண்டுகள் நீடித்த போர், கடந்தாண்டு ஒக்டோபரில் முடிவுக்கு வந்தது.

அப்போது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் 20 அம்ச காசா அமைதித் திட்டத்தை அறிவித்தார்.

இதன் ஒரு பகுதியாக, காசாவில் அமைதியை ஏற்படுத்துவது, புனரமைப்பு பணிகள் மேற்கொள்வது போன்றவற்றுக்காக, காசா அமைதி வாரியம் அமைக்கப்படும் என, இந்தாண்டு தொடக்கத்தில் அறிவித்தார்.

ட்ரம்ப் தலைமையிலான இந்த வாரியத்துக்கான உறுப்பினர்களையும் அவர் அறிவித்தார்.

இதற்கிடையே, இதில் இணையும்படி, இந்தியா உட்பட 60 நாடுகளுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில், ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடக்கும் உலக பொருளாதார மன்றக் கூட்டத்துக்கு இடையே, அமைதி வாரியம் தொடர்பான அறிவிப்பை ட்ரம்ப் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

அதற்கான இலட்சினை, திட்டங்கள் உள்ளிட்டவற்றையும் அவர் அறிவித்தார்.

தற்போது 20 நாடுகள் இதில் இணைந்துள்ளன.

காசாவுக்காக ஆரம்பிக்கபட்டாலும் உலக அளவிலான மோதல்களுக்கு தீர்வு காணபதில் இந்த வாரியம் செயற்படும். (நி)

## பாராளுமன்றத்தைக் கலைத்தார்
## ஜப்பான் பிரதமர் சனே தகாய்ச்சி

(டோக்கியோ)

ஜப்பானின் முதல் பெண் பிரத ரான சனே தகாய்ச்சி நேற்று வெள்ளிக்கிழமை அந்நாட்டு பாரா மன்றத்தைக் கலைத்து அதிரடி த்தரவு பிறப்பித்துள்ளார். இத னத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் ஆம் திகதி ஜப்பானில் இடைத் தர்தல் நடைபெறவுள்ளது.

பதவியேற்ற மூன்றே மாதங் ளில், ஜப்பானியப் பிரதமர் சனே காய்ச்சி அந்நாட்டின் கீழ் பையைக் கலைத்துள்ளார். தனது சல்வாக்கை உறுதிப்படுத்தவும், ஆளுங்கட்சியின் பலத்தை அதிகரிக் வும் அவர் இந்தத் தீர்மானத்தை டுத்துள்ளார்.

2025ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஜப்பானின் முதல் பெண் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட சனே தகாய்ச்சி, தற்போது 70 சதவீத மக்கள் ஆதரவுடன் செல்வாக்கு மிக்க தலைவராகத் திகழ்கிறார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, பெப்ரவரி மாதம் 08ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும்.

இதற்கான உத்தியோகபூர்வ பிரசாரம் ஜனவரி 27ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

தாய்வான் விவகாரத்தில் சனே தகாய்ச்சி எடுத்துள்ள உறுதியான நிலைப்பாடு சீனாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே தூதரக மற்றும் பொருளாதார ரீதியான உரசல் அதிகரித்துள்ளது.


அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஜப்பான் தனது இராணுவச் செலவினங்களை அதிகரிக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், சனே தகாய்ச்சி அதனைச் சமாளிக்க வேண்டியுள்ளது.

விலைவாசி அதிகரிப்பு மற்றும் பொருளாதாரத் தேக்கநிலையைச் சரிசெய்ய புதிய வரவு - செலவு தாக்கல் செய்யப்பட வேண்டிய சூழலில், இந்தத் தேர்தல் அறிவிப்பு எதிர்க் கட்சிகளால் விமர்சிக்கப்படுகிறது.

2024ஆம் ஆண்டு தேர்தலில் ஆளுங்கட்சியான LDP பெரும் பின்னடைவைச் சந்தித்தது.

தற்போது பிரதமரின் தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி, பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்கான பெரும்பான்மையை வலுப்படுத்த சனே தகாய்ச்சி திட்டமிட்டுள்ளார்.

"மக்கள் என் மீது நம்பிக்கை வைத்துள்ளார்களா என்பதை அவர்களே தீர்மானம் செய்யட்டும்" என அவர் இது தொடர்பில் தெரிவித்துள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்தக் கலை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்தக் கலை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4:30 மணிக்கு மன்றத்தின் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இறை வணக்கம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்தை மன்ற மாணவர்களும் ஆசியுரையினை மன்றத்தின் காப்பாளர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் கலாநிதி.எஸ். சூரியகுமார் ஆகியோர் வழங்க வுள்ளனர்.

கலை நிகழ்வுகளாக பத்மநாதன் சியாம்கிருஷ்ணா மற்றும் கணேஸ்வர குருக்கள் வித்தியாசாகர் ஆகியோரின் வயலின் இசை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு அணியிசை கலைஞர்களாக மிருதங்கம் - முரளிதரன் சுலக்சன், கடம் - சரவணபவன் பிரணவன், மோர்சிங் - சேதிலிங்கம் சிவயெனன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

அத்துடன் கலைவாணர் வில்லிசை குழுவினர் "ஆசைக்கு அளவில்லை" எனும் தலைப்பில் வழங்கவுள்ள வில்லிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நிகழ்வில் நன்றியுரையினை மன்றத்தின் உப செயலாளர் அ.அமிர்தலோஜனனன், நிகழ்ச்சித் தொகுப்பினை உபதலைவர் செந்தூரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வுக்கான அனுசரணையை சங்கீதவித்துவான் திருமதி. வரதா விவேகானந்தன் வழங்குவுள்ளார். (3)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1983- இந்து
நட்சத்திரம்: ரோகினி
7இல்சூரிசெவ்
கி-பா-49
உயரம்: 5'5"
தகைமை/தொழில் - A/L, Business (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16471

பிறப்பு:1994- இந்து
நட்சத்திரம்:புணர்பூசம்
கி-பா- 54
உயரம்-6"
தகைமை/தொழில்-BSC, Software Developer(Canada)
எதிர்பார்ப்பு: படித்த தகுதியான பெண்
தொ.இ: B/16472

பிறப்பு:1981-இந்து
நட்சத்திரம்-அவிட்டம்
கி-பா-84
1இல்செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்-BSC, MSc(UK)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்
தொ.இ: B/16474

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி-பா-21
2இல்சூரிசெவ்
உயரம்:5'11"
தகைமை/தொழில் - BSc,Software Engineer (Singapore)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16475

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி-பா-23
உயரம்:6'1"
தகைமை/தொழில்: BSc, MSc, Assistant Manager
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16476

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்-சதயம்
கி.பா -8 1/4
உயரம்-5'8"
தகைமை/தொழில்: BBA, Executive Officer
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/15480

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்: சதயம்
7இல்செவ்
கி-பா-18
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, Project Manager
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, பட்டதாரி
தொ.இ: G/15648

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-கேட்டை
கி.பா -55
உயரம்-5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15654

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:மகம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc,Teacher
எதிர்பார்ப்பு:அரச வேலை, வெளிநாடு-(லண்டன், கனடா)
தொ.இ: G/13037

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்:பரணி
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Account Course
எதிர்பார்ப்பு:வெளிநாடு,தொழில்
தொ.இ: G/15565

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 527



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## புத்தாண்டு நினைவுகள்

ஒரு பத்திரிகை நிருபர். புத்தாண்டு செய்தி வாங்குவதற்காக ஒரு பெரிய மனிதர்வீட்டுக்குப் போனார். "இதுமாதிரி" புத்தாண்டு செய்தி வாங்குவதற்காக வந்திருக்கிறேன்" என்றார். "கொஞ்சம் இப்படி உட்காருங்கள். இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே எழுந்து போனார். கொஞ்ச நேரத்திலே ஒரு பேப்பரோடு வெளியிலே வந்தார். என்னுடையது "இதுதான் என்னுடைய புத்தாண்டு செய்தி" போட்டுக் கொள்ளுங்கள் உங்கள் பேப்பரிலே என்று அதைக் கொடுத்தார்.

"ரொம்ப நன்றி" என்று சொல்லி அதை வாங்கிக்கொண்டு, வெளியிலே வந்தார் நிருபர். வரும் வழியிலே அதைப் பிரித்துப் பார்த்தார். அப்போதுதான் ஒரு விடயம் புரிந்தது அவருக்கு!

போன வருடம் கொடுத்த அதே செய்தியை அந்த நபர் இப்பவும் கொடுத்திருக்கிறார். மனிதன் நிறைய "காப்பி" எடுத்து வைத்திருப்பார்போல இருக்கு! ஏன் சார்? வருடம் தான் புதிதாக பிறக்குது! அதே மாதிரி கருத்தும் புதிதாக பிறக்கக்கூடாதா?

அவர்களும் வேறு எதைத்தான் சொல்லுவார்கள். "போன வருட கஷ்டமெல்லாம் போன வருடத்தோடு போகட்டும் பிறந்திருக்கின்ற புதுவருடம் ஜனங்களுக்கு எல்லா சௌகரியங்களையும் வாரி வழங்கட்டும்" என்று சொல்வதே வழக்கமாக போய் விட்டது! இந்த வருடக் கடைசிலேயும், "இந்த வருட கஷ்டமெல்லாம் இந்த வருடத்தோடு போகட்டும் இனிப் புதிதாக பிறக்கின்ற வருடம் எல்லா சௌகரியங்களையும் கொடுக்கட்டும் என்றுதான் சொல்லுவார்கள்.

"கஷ்டம்" என்பது "வருடம்" நமக்குக் கொடுக்கிறது இல்லை சார்! நமக்கு நாமே உண்டாக்கிக்கிறதுதான். அதற்கு வருடத்தைக் குறைசொல்லி என்ன பிரயோசனம்? உலகில் ஆசைகள்தான் துன்பத்திற்குக் காரணம் என்கிறதை எத்தனையோ அறிஞர்கள் எத்தனையோ தடவை சொல்லி வைத்திருக்கிறார்கள், ஸ்ரீராமகிருஷ்ணரும் ஒரு கதை மூலமாக இதைச் சொல்லியிருக்கிறார்.

ஒரு நாடோடி களைத்துப்போய் ஒரு மரத்தடியின் நிழலிலே உட்கார்ந்தான். காற்று சுகமாக வீசியது! ஆஹா... இப்படி ஒரு நல்ல படுக்கை இருந்தால் எவ்வளவு சுகமாக தூங்குவேன்!" என்று நினைத்தான். அப்படி நினைத்து முடிப்பதற்குள்ளே ஒரு ஆச்சரியம். அழகான பஞ்சணை ஒன்று பக்கத்திலே இருந்தது. இது எப்படி நடந்தது? அவன் ஒரு மரத்தடியிலே உட்கார்ந்திருக்கானே. அது கற்பக மரம் கேட்கிறதையெல்லாம் கொடுக்கும். நினைக்கிறதை எல்லாம் கொடுக்கும்! கற்பக மரத்துக்கு அடியிலேதான் உட்கார்ந்திருக்கிறோம் என்கிறது அவனுக்குப் புரியவில்லை!

பஞ்சணை எப்படி வந்தது பக்கத்திலே என்றெல்லாம் அவன் அதிகமாக யோசிக்கவில்லை. உடனே அதிலே படுத்துக் கொண்டான். சுகமாக இருந்தது. கொஞ்ச நேரம் ஆனது. "உடம்பெல்லாம் ஒரே வலியாக இருக்கிறதே. கை காலை இரண்டு பேர் பிடித்துவிட்டால் எவ்வளவு நல்லா இருக்கும்." என்று நினைத்தான்! அப்படி நினைத்துக் கொண்டிருக்கும்போது இரண்டு பேர் கையையும் காலையும் பிடித்துவிட்டு கொண்டிருக்கிறார்கள்!

வயிறு பசிக்க ஆரம்பித்தது! அறுசுவை உணவு கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று நினைத்தான். அடுத்த விநாடியே அவ்வளவும் ரெடி! பார்த்து விட்டான். சும்மா விடுவானா? பக்குவமாக சாப்பிட்டு முடித்துவிட்டு மறுபடியும் படுத்துக்கொண்டான். நினைக்கின்றதெல்லாம் உடனே நடந்து கொண்டிருக்கிறது. அதை நினைக்கின்றபோது அவனுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. இனிமேல் அவனுக்கு வேண்டியது ஒன்றுமில்லை. அந்த அளவுக்கு வந்துவிட்டான்.

மனது முழுவதும் சுகமாக இருந்த நேரத்திலே திடீர் என்று ஒரு பயம் உண்டானது! "இப்போது இங்கே ஒரு புலி வந்துவிட்டால் என்ன செய்வது?" என்று யோசித்தான். கற்பக விருட்சம்தான் நினைக்கிறதையெல்லாம் கொடுத்துவிடுமே! திடீர் என்று ஒரு காட்டுபுலி அவனுக்கு முன்னாடி நின்றது இவன் "ஆ" என்று கத்துவதற்குள்ளே மேலே பாய்ந்து அடித்து போட்டுவிட்டுப் போய்விட்டது!

இப்படித்தான் சார்! நினைப்புத்தான் பொழப்பைக் கெடுக்கும்! அதனாலே நாம் நினைக்கிறதையெல்லாம் புதுவருடம் கொடுத்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறதும் சரியில்லை! வருடம்தான் நமக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்! "இந்த வருடத்திலே நான் இப்படி நடந்துக்குவேன்" என்று நாம்தானே வருடத்துக்கு வாக்குறுதி கொடுக்க வேண்டும்! எதற்கும் கமிட் செய்வது இயல்பான சுபாவம்! அதுவுமில்லாமல், நாம் கேட்டே பழக்கப்பட்டு விட்டோம். கலண்டர் டைரியிலே ஆரம்பிக்கிறோம். அதைப் புதுவருடம் பிறக்கும் சமயத்திலே மனிதன் எப்படி இருக்கிறான் என்று பார்த்துவிட்டு வரலாம் என்று கடவுள் பூமிக்கு வந்தார். ஒரு ஆசாமியை கூப்பிட்டு பேசிப் பார்த்தார். வருடம் பிறந்திருக்கிறது உனக்கு ஏதாவது வேண்டும் என்றால் கேள். தருகிறேன்! என்றார்.

அவன் கொஞ்சம் கெட்டிக்காரன். கடவுளிடமே போட்டுக் காட்டலாம் என்று நினைத்துவிட்டான். "சாமி உங்கள் தேவலோகத்திலே ஒரு ரூபாய் என்கிறது இங்கே பூலோகத்திலே ஒரு கோடி ரூபாய்க்கு சமம் என்றும் அங்கே உங்களுக்கு "ஒரு நாள்" என்கிறது இங்கே எங்களுக்கு ஆயிரம் வருடம் என்றும் கோயிலிலே ஒருவர் பிரசங்கம் செய்தார். கேட்டேன் அது உண்மை தானா?" என்று கேட்டான். "உண்மைதான்!" என்றார் கடவுள். "அப்படி என்றால் எனக்கு அதிகமாக ஒன்றும் வேண்டாம்! உங்கள் கணக்குப்படி ஒரே ஒரு ரூபா கொடுங்கள். அது போதும்!" என்றான் இவன். கடவுள் யோசித்தார்! "ஒரு ரூபா கொடுக்கிறது எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை! ஆனால் இங்கே வரும்போது எடுத்துக்கொண்டுவர மறந்துவிட்டேன். என் கணக்குப்படியே ஒரே ஒருநாள் பொறுத்துக் கொள்ளுங்கள்! நாளைக்கு வந்து தருகிறேன்!" என்று சொல்லிவிட்டு புறப்பட்டு போய் விட்டார்! ஏன் சார்! வருடப் பிறப்பும் அதுவுமாக வாழ்த்திவிட்டு போகலாம் என்று வந்தால் வந்த இடத்திலே இப்படியாக நடக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்தை வென்றது இலங்கை!

**இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணி 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.**



இங்கிலாந்து அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களில் விளையாடி வருகிறது.

இந்நிலையில், இரு அணிகளுக்கான முதல் ஒருநாள் போட்டி கொழும்பில் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்று இலங்கை அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பாட்டம் செய்த இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 271 ஓட்டங்கள் எடுத்தது. குசால் மெண்டிஸ் பொறுப்புடன் ஆடி 93 ஓட்டங்கள் எடுத்து சதமடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டார். ஜனித் லியாங்கே 46 ஓட்டங்கள் சேர்த்தார். இங்கிலாந்து சார்பில் அடில் ரஷித் 3 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 272 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் ஜாக் கிராலி 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான பென் டக்கெட்டுடன் ஜோ ரூட் இணைந்தார்.

இருவரும் பொறுப்புடன் ஆடி அரை சதம் கடந்தனர்.

2 ஆவது விக்கெட்டுக்கு 117 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பென் டக்கெட் 62 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஜோ ரூட் 61 ஓட் டங்களில் வெளியேறினார்.

இறுதிக் கட்டத்தில் அதிரடியாக ஆடிய ஜேமி ஓவர்டன் 17 பந்தில் 34 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் இங்கிலாந்து 49.2 ஓவரில் 252 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டானது.

இதன்மூலம் இலங்கை அணி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன், ஒரு நாள் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

இலங்கை அணி சார்பில் பிரமோத் மதுஷான் 3 விக்கெட்களும், துனித் வெல்லாலகே, ஜெப்ரி வாண்டர்சே தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருது துனித் வெல்லாலகேவுக்கு அளிக்கப்பட்டது. (3)

# 3 ஆவது ரி-20 போட்டி

## ஆப்கானை வீழ்த்தி மே.தீவுகள் ஆறுதல் வெற்றி

ஆப்கானிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 3 ஆவது ஒருநாள் போட்டி டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 151 ரன்கள் எடுத்தது.

தொடக்க ஆட்டக்காரர்களான பிராண்டன் கிங் 47 ஓட்டங்களிலும், மேத்யூ போர்டு 27 ஓட்டங்களிலும் வெளியேறினார்.

இதையடுத்து, 152 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஆப்கானிஸ்தான் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தது.

தொடக்க ஆட்டக்காரர் குர்பாஸ் அதிரடியாக ஆடி 71 ஓட்டங்கள் குவித்தார். இப்ராகிம் ஜட்ரன் 28 ஓட்டங்கள் சேர்த்தார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்க வில்லை.

இறுதியில், ஆப்கானிஸ்தான் 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 136 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்றது. இதையடுத்து, ஆப்கானிஸ்தான் ரி-20 தொடரை 2-1 என கைப்பற்றியது.

மேற்கிந்திய தீவுகள் அணி சார்பில் ஷமர் ஸ்பிரிங்கர் 4 விக் கெட்டுகளை வீழ்த்தினார். (3)



# இராசிபலன்

24.01.2026
தை 10, சனிக்கிழமை
சஷ்டி முன்னிரவு 11.22 மணிவரை

உத்தரட்டாதி பிற்பகல் 1.26 மணிவரை
சுப நேரம் 3.36-5.06 மணிவரை
இராகுகாலம் 09.36-11.06 மணிவரை

சந்திராஷ்டமம்
பூரம், உத்தராடம்

வளவன்

**மேஷம்** — பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் கடைசி நேரத்தில் உதவ முன்வரலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**கடகம்** — கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மறதியால் விட்டுப் போன காரியங்களை இனிதே செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** — தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடைபெறும் நாள்.

**மகரம்** — தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கை கூடும், தொலைபேசி வழியில்கேட்கும் செய்திகளால் திகைப்படைவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**ரிஷபம்** — பொது வாழ்வில் புகழும் பாராட்டும் பெறும் நாள், பணப் பழக்கம் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — ஆதாயமில்லா அலைச்சல்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, நட்பொன்று பகையாக மாறும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** — சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** — நண்பர்களால் வளர்ச்சி கூடும், கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும் வாய்ப்புண்டு, இல்லத்தில் இன்பங்கள் கைகூடும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** — பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் கூடும் நாள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், உற்சாகமான செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** — பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கை கூடும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** — ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மீனம்** — குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, புதிய நபர்களின் நட்பு கிடைக்கும், வாக்கு சாதூரியத்தால் வளம் காணும் நாள்.

**உறுதியுள்ளவன் உலகை தனக்கு வேண்டிய முறையில் அமைத்துக் கொள்கிறான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 963





"ஆமாம் உன் பேரில் கோபித்துக் கொள்வதில் பயனில்லை. தெரிந்துதான் நான் உன்னை என் சகோதரியிடம் ஓலையுடன் அனுப்பினேன். நீயும் அவளுக்குத் திருப்தியாக நடந்து கொண்டாய். ஆனால் பார்த்திபேந்திரனிடம் மட்டும் இதையெல்லாம் சொல்லிவிடாதே! அவன் சோழ குலத்துக்கு மருமகனாகித் தொண்டை நாட்டுக்கு மன்னனாக விளங்கலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறான்."

"ஐயா! அவ்விதம் சில காலத்துக்கு முன்பு வரையில் இருந்திருக்கலாம். இப்போது கந்தமாறன், பார்த்திபேந்திரன் இருவரும் நந்தினி தேவி காலால் இட்ட வேலையைத் தலையினால் செய்யக் காத்திருக்கிறார்கள்."

"அதை நான் கவனித்து வருகிறேன் ஆகையினால் தான் அவர்கள் விடயத்தில் எனக்குப் பயமாயிருக்கிறது."

"எல்லாவற்றையும் உத்தேசிக்கும்போது, தாங்கள் இளைய ராணியைச் சீக்கிரம் சந்தித்து எல்லா உண்மைகளையும் சொல்லி விடுவது அவசியம் என்று தோன்றுகிறது."

"நண்பா! எனக்கு அவ்வளவு தைரியம் வரும் என்று தோன்றவில்லை. எனக்குப் பதிலாக நீயே அவளைச் சந்தித்துச் சொல்லி விட்டால் என்ன?"

"இளவரசே! நான் சொன்னால் இளைய ராணிக்கு நம்பிக்கை ஏற்படாது. ஒரு முறை நான் அவரை ஏமாற்றிவிட்டு தப்பித்துக் கொண்டு சென்றிருக்கிறேன். ஆகையால் இதுவும் ஏதோ ஒரு சூழ்ச்சி என்று கருதக் கூடும்."

"ஆனால் நான் நந்தினியைத் தனியாகச் சந்திப்பது எப்படி? அவளோ அந்தப்புரத்தில் இருக்கிறாள்!"

"ஐயா! மணிமேகலையின் மூலம் அது சாத்தியமாகும். அதற்கு வேண்டிய ஏற்பாடு நான் செய்கிறேன்."

"மணிமேகலையை நீ கைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது. நல்ல காரியந்தான்! எது எப்படியானாலும் மணிமேகலையை உனக்குத் திருமணம் செய்து விட்டேனானால், என் உள்ளம் ஓரளவு நிம்மதி அடையும்."

"ஐயா! மணிமேகலையை நான் என் உடன் பிறந்த சகோதரியாகக் கருதுகிறேன். அவளுக்கு இன்னும் பன்மடங்கு மேலான அதிஷ்டம் கிட்டக்கூடும் என்று எதிர்பார்க்கிறேன்". எதைப் பற்றிச் சொல்லுகிறாய்?"

"தெரியவில்லையா, இளவரசே! சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்து இளவரசரின் உள்ளத்தில் கன்னி மணிமேகலை இடம் பெற்றிருப்பதாக ஊகிக்கிறேன். சற்றுமுன் சம்புவரையர் குமாரியைப் பற்றி ஒரு மாதிரி பேசினேன்.

என் மனத்தைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்காக அவ்விதம் சொன்னேன். இளைய பிராட்டி ஒருவரைத் தவிர இந்த உலகில் பிறந்த வேறு எந்தப் பெண்ணும் மணிமேகலைக்கு அறிவிலும் குணத்திலும் இணையாக மாட்டார்கள். தாங்கள் மட்டும் மணி மேகலையை மணந்து கொண்டால் நம்முடைய தொல்லைகள் எல்லாம் தீர்ந்து விடும். சம்புவரையரும் கந்தமாறனும் நம்முடன் சேர்ந்து விடுவார்கள். பழுவேட்டரையர்கள் தனித்துப் போய் விடுவார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பெரிய கொடை



ரஷ்ய எழுத்தாளரான டால்ஸ்டாய் பெருஞ் செல்வராக இருந்த போதிலும் இரக்ககுணம் உடையவராக விளங்கினார். தன்னை நாடி உதவி கேட்டு வருபவர்களுக்குத் தாராளமாகப் பொருட்களை வழங்கினார். ஒரு நாள் டால்ஸ்டாய் ஏதோ வேலையாக ஓர் ஊர் வழியாகச் சென்று கொண்டிருந்தார்.

கந்தல் ஆடையுடன் கண்கள் குழி விழுந்து பரிதாபமாகக் காட்சி அளித்த பிச்சைக்காரன் ஒருவன் அவரிடம், "ஐயா! நான்கு நாட்களாகப் பட்டினி. இந்த ஏழைக்கு ஏதேனும் பிச்சை போடுங்கள்" என்று கையை நீட்டினான்.

அந்தப் பிச்சைக்காரனுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நினைத்த டால்ஸ்டாய் தம் சட்டைப் பைகளைத் துழாவினார்.

உண்மையிலேயே அப்பொழுது அவரிடம் ஒரு காசுகூட இல்லை. என்ன செய்வது என்று நினைத்த அவர், பிச்சைக்காரனைப் பார்த்து, "சகோதரனே! என்னிடம் இப்பொழுது காசு இல்லை, நீ என் வீட்டிற்கு வந்தாலோ அல்லது உன்னை மறுமுறை சந்தித்தாலோ நான் உனக்கு நிறைய பிச்சை போடுகிறேன்" என்றார்.

இதைக் கேட்ட பிச்சைக்காரன் தழுதழுத்த குரலில் "ஐயா! யாரும் இதுவரை எனக்கு அளிக்காத பெரிய பிச்சையைத் தாங்கள் எனக்கு அளித்தீர்கள்.

என்னையும் மனிதனாக மதித்துச் சகோதரனே என்று அழைத்தீர்களே. அதுவே எனக்கு போதும். நன்றி" என்று கூறிவிட்டு சென்றுவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு நாம் செய்யும் உதவிகள் நமது வாழ்வின் மதிப்பை உயர்த்தும்.

- அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## வேலைநிறுத்தப் போராட்டத்தை மருத்துவர்கள் கைவிட வேண்டும்

நாடளாவிய ரீதியில் மருத்துவர்கள் நேற்று 23 ஆம் திகதி முதல் அடுத்து வரும் 48 மணித்தியாலங்களுக்கு அடையாளப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்துள்ள குறித்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு சில மருத்துவ சங்கங்கள் ஆதரவு வழங்கவில்லை என்ற தகவல்களும் உண்டு.

எதுவாயினும் அரச மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதென்பது மிகவும் கொடுமையான செயல் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், மருத்துவர்கள் கடவுளுக்குச் சமமானவர்கள் என்று போற்றப்படுகின்றனர்.

அவர்கள் உயிர்களைக் காக்க வல்லவர்கள் என்பதால், கடவுளுடன் ஒப்பிடுகின்ற அளவில் அவர்களை மக்கள் உயர்வாக மதிக்கின்றனர்.

ஆனால் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இடையிடையே வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்து; நாங்கள் உயிர்களைக் காப்பாற்றுபவர்கள் மட்டுமல்ல, உயிர்களை எடுக்கவும் தயங்க மாட்டோம் என்பதை நிரூபித்து வருகின்றது.

ஆம், அரசாங்கத்திடம் கோரிக்கைகளை முன்வைத்தால் அது தொடர்பில் அரசு கவனம் செலுத்தவில்லை என்பதற்காக, அப்பாவி நோயாளர்களை வதைத்து அவர்களின் உயிரைப் பணயம் வைத்து உங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நினைப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

நீங்கள் கேட்கின்ற கோரிக்கைகள் நியாயமானதாக இருக்கலாம். அந்தக் கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை என்பதற்காக, நாங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம் - நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கமாட்டோம் எனக் கூறுவதும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதும் மிக மோசமான - மனித நேயமற்ற செயல் என்பதை சம்பந்தப்பட்ட மருத்துவ சங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் உங்களின் பணிப் புறக்கணிப்பு என்பது ஏழை மக்களின் உயிர்களுடன் விளையாடுகின்ற கொடும் செயல்.

நீங்கள் வேலைநிறுத்தம் செய்வதால், பணக்கார வர்க்கம் ஒருபோதும் பாதிக்கப்படப் போவதில்லை. ஏனெனில் உங்களின் பணிப் புறக்கணிப்பு என்பது அரச வைத்தியசாலைகளில் மட்டுமேயன்றி, தனியார் வைத்திய சாலைகளில் அல்ல.

ஆக, உங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வேலைநிறுத்தப் போராட்டங்களை நீங்கள் ஆயுதமாகத் தொடர்ந்தும் முன்னெடுத்தால், அதனால் பாதிப்படையும் பொதுமக்கள் உங்களுக்கு எதிராகப் போராடுகின்ற நிலைமையும் ஏற்படலாம்.

அவ்வாறு பொதுமக்கள் உங்களுக்கு எதிராக எழுச்சி கொண்டால், நீங்கள் பலவற்றை இழக்க நேரிடும் என்பதைத் தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்.

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிராக மானிப்பாயில் தீர்மானம்

அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக வலிகாமம் தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அமர்வு நேற்று (23) வெள்ளிக்கிழமை இடம்பெற்றவேளை, தவிசாளர் ஜெசீதன் அவர்களால் பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தை பாதுகாக்கும் சட்டத்திற்கு எதிரான குறித்த பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது.

இதன்போது பிரேரணை குறித்துக் கருத்துரைத்த தவிசாளர்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக தற்போதைய அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டமானது எமது இனத்திற்கு பாரிய இழப்பினை ஏற்படுத்தவுள்ளது. 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி இந்த சட்டமானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்தச் சட்டமானது இதற்கு முன்னர் இருந்த இரண்டு சட்டங்களை விடவும் மிகவும் கொடூரமான சரத்துக்களை கொண்டதாகக் காணப்படுகின்றது.

தற்போது அரசானது தேர்தல் வாக்குறுதிகளின்போது, தாம் ஆட்சிக்கு வந்ததும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதாக தெரிவித்தது. அதனை நிறைவேற்றுவது போல் அந்த சட்டத்தைவிட மிகவும் மோசமான சட்டத்தை கொண்டு வர உள்ளது.

எனவே அந்தச் சட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்ற பிரேரணையை நான் இந்த மானிப்பாய் பிரதேச சபையில் கொண்டு வருகிறேன் என்றார்.

குறித்த பிரேரணை தொடர்பாக உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். பின்னர் பிரேரணையானது வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் ஐந்து உறுப்பினர்களும் பிரேரணை குறித்து நடுநிலை வகித்ததுடன், சபையில் இருந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதன் பிரகாரம் குறித்த பிரேரணையானது உறுப்பினர்களின் ஏகபோக வாக்குகளால் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கலாசார சங்கமத்துடன் தைப்பொங்கல் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய (CODL) கலைமாணி மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "தைப்பொங்கல் பெருவிழா - 2026" ஆனது நாளை ஞாயிற்றுக்கிழமை (25) காலை 9.00 மணிக்கு நிலையத்தின் முன்றலில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

திறந்த மற்றும்தொலைக்கல்வி நிலையத்தின் கலைமாணி மூன்றாம் வருட மாணவர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெறுகின்ற இந்த நிகழ்வில் தமிழர் பண்பாட்டு விழுமியங்களைப் போற்றும் வகையில் பொங்கல் வழிபாடுகளைத் தொடர்ந்து, மாணவர்களிடையேயான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-7)

## மழைக்கு வாய்ப்பு

வடக்கு மாகாணம் உள்ளடங்கலாக நாட்டில் அடுத்து வரும் 36 மணித்தியாலங்களில், பல பகுதிகளில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதற்கமைய வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களிலும் 50 மில்லி மீற்றர் வரையான மழை வீழ்ச்சி பதிவாகும் என்று அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் ஏனைய பிரதேசங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையுடனான வானிலை நிலவக்கூடும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. (ம-7)

## வல்வெட்டித்துறையில் குருதிக்கொடை நிகழ்வு

(வல்வெட்டித்துறை)

பருத்தித்துறை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம் ஊடாக நடைபெறவுள்ள 84 வது இரத்ததான நிகழ்வானது நாளை (25) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியில் அமைந்துள்ள கணபதி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான நிகழ்வுக்கு குருதிக் கொடை வழங்கும் அனைவருக்கும் கற்றல் உபகரணங்கள் மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். மேலும் வழமை போன்று குருதிக் கொடை வழங்கிய அனைவரின் பெயர்களும் உள்வாங்கப்பட்டு ஒருவரின் பெயர் தெரிவு செய்யப்பட்டு வெள்ளிப் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்படும் என வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

## வாகன விபத்தில் இருவர் படுகாயம்

(மந்திகை)

மந்திகை, மடத்தடி பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பிரதான வீதியூடாக பருத்தித்துறை நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று மடத்தடி சந்தியில் திடீரென வலது பக்கம் திரும்ப முற்பட்ட போது, அதன் பின்னால் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தினால் இரண்டு வாகனங்களும் சேதமடைந்ததோடு, அவற்றில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களை அப்பகுதி மக்கள் மற்றும் பாதசாரிகள் உடனடியாக மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## 200 கிலோவுக்கும் அதிக போதைப்பொருளுடன் சிக்கியது மீன்பிடிப் படகு

(கொழும்பு)

தெற்கு கடற்பரப்பில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போது, 200 கிலோகிராமுக்கும் அதிகமான போதைப் பொருட்களை ஏற்றிச் சென்ற பலநாள் மீன்பிடி படகு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த படகினுள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்தப் போதைப்பொருள் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட படகு மற்றும் போதைப் பொருள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸ்போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

05

என்.சொக்கன்

இப்படி நீளமாகப் பட்டியல் போட்டாலும், சிஐஏ என்ன நோக்கத்துக்காகத் தொடங்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்திருந்தது. அமெரிக்காவைச் சுற்றிலும் ஒரு கோடு கிழித்துக் கொள்ளவேண்டியது, அதற்கு வெளியில் என்ன வேண்டுமானாலும் கலாட்டா செய்துகொள்ளலாம், கோட்டுக்கு உள்ளே இருக்கிறவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். அவ்வளவுதான்.

இதன்மூலம், மறைமுகமாக மற்ற நாடுகளின் ஆட்சியாளர்கள் அனைவருக்கும் ஒரு மிரட்டல் விடுத்தது அமெரிக்கா- எங்களுடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறாயா? நாங்கள்தான் மற்ற எல்லோரையும்விட உசத்தி என்று நம்புகிறாயா? சந்தோஷம், உன்னுடைய ஆட்சிக்கு எந்தக் குறையும் வராமல் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், பிழைத்துப் போ!

இதேபோல், சோவியத் யூனியனை அல்லது கம்யூனிசக் கொள்கைகளை ஆதரிக்கிற நாடுகள், ஆட்சியாளர்கள் எல்லோரையும், தங்களது விரோதிப் பட்டியலில் சேர்த்துவிட்டது அமெரிக்கா. இந்த ஆட்சிகளைக் கவிழ்ப்பதற்காக, என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பது சிஐஏவில் எழுதப்படாத ஒரு விதி.

ஆனால், சிஐஏ அமெரிக்கப் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட இயக்கம் இல்லையா? வெளிநாட்டு ஆட்சியாளர்களைக் கவிழ்ப்பதற்கும் அமெரிக்கப்பாதுகாப்புக்கும் என்ன சம்பந்தம்?

இல்லையா பின்னே? சோவியத் ரஷ்யாவுக்கு ஒரு நாடு ஆதரவு தருகிறது என்றால், அவர்களுடைய ஆதிக்கம் அதிகரிக்கிறது என்று தானே அர்த்தம். கம்யூனிசம் செழித்து வளரும் ஓர் உலகத்தில் அமெரிக்கா எப்படிப் பாதுகாப்பாக நிம்மதியாக இருக்கமுடியும்?

கம்யூனிசம் என்கிற பூதத்திலிருந்து, உலகப் பொது மக்களைக் காப்பாற்றுவதற்காகதான் நாங்கள் இதையெல்லாம் செய்கிறோம் என்று அமெரிக்கா ஒரு நியாயம் கற்பித்துக்கொண்டது. ஆனால் உண்மையில், தங்களுடைய கருத்துகள், கொள்கைகளுக்கு மாற்றான ஓர் அரசாங்கமும் அல்லது இயக்கம், உலகத்தில் எங்கே இயங்குவதையும் அவர்கள் விரும்பவில்லை.

ஆரம்பத்தில், நிஜமாகவே அமெரிக்காவின் பாதுகாப்பு கருதித்தான். இப்படி வெளி விரோதிகளைத் தேடிப் பிடித்து நசுக்கப்பார்த்தார்கள். ஆனால் இதுவே பின்னர் "உலகக் காவல்காரன்" என்கிற இமேஜ்"க்கு அமெரிக்காவைக் கொண்டுசென்று விட்டது.

சிஐஏ தொடங்கப்பட்ட கால கட்டத்தில், அவர்களுக்குத் தரப்பட்டிருந்த அதிகாரங்கள் மிகக் குறைவுதான். ஆனால் அடுத்தடுத்த வருடங்களில் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் கூடுதல் பலம் சேர்த்துக் கொண்டது அந்த அமைப்பு.

இன்றுவரை. சிஐஏவுக்காக எவ்வளவு தொகை ஒதுக்குகிறோம்.




அது எப்படிச் செலவாகிறது என்பதை அமெரிக்கா பகிரங்கமாகச் சொல்வதில்லை. அதேபோல், சிஐஏ உளவாளிகள், அதிகாரிகள் என்னென்ன நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதும் பரம இரகசியமாகவே காக்கப்படுகிறது.

இதற்கு மிக எளிமையான காரணம், இதையெல்லாம் வெளியில் சொல்லிக்கொண்டிருக்கமுடியாது என்பது தான். சிஐஏ என்று போர்ட் வைத்து மாலை போட்ட அந்த முதல் நாளில் தொடங்கி, உலகம் மொத்தத்தையும் அமெரிக்காபோலவே, அமெரிக்காவுக்கு ஆதரவாகவே சிந்திக்கச் செய்கிற கடமையைதான் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

யாரேனும் இதை எதிர்த்தால்? அமெரிக்காவின் ஆளுமையை ஏற்க மறுத்தால்? சிஐஏவைப் பொறுத்த வரை இந்த இரண்டுமே ஒன்று தான். அமெரிக்காவை ஏற்க மறுக்கிறவர்கள், அதை எதிர்ப்பதாகக் கருதப்படுவார்கள். அவர்களை ஆட்சியிலிருந்து கீழே இறக்குவதற்கு, சிஐஏ எதுவும் செய்யும்.

எதுவும் என்றால், எதுவும். இந்த விஷயத்தில் அவர்களுக்கு முழுச் சுதந்திரம் தரப்பட்டது. அந்த நாட்டு மக்களிடையே, அவர்களுடைய அரசுக்கு எதிரான கருத்துகளைத் திட்டமிட்டுப் பரப்புவதில் தொடங்குவார்கள். இதனால் உள்நாட்டின் குழப்பம் உண்டானபிறகு, அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்படுகிற இயக்கங்களைத் தேடிப் பிடித்துப் பண உதவியும் ஆயுதப் பயிற்சியும் தருவார்கள், முடிந்தால், மறைமுக மான இராணுவ நடவடிக்கைகள், இல்லாவிட்டால், ஆட்சியில் இருக்கிற முக்கியப் பிரமுகர்களை அடித்துக் காலி செய்து விடுவது.

யார் என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனித்து ரிப்போர்ட் தர வேண்டிய ஒரு சாதாரண உளவு அமைப்பாகத் தொடங்கி, சிஐஏ எங்கோ போய்க்கொண்டிருக்கிறது என்பதை அமெரிக்கர்கள் கவனிக்கவில்லை. அல்லது. அதன் போக்கைச் சுவாரஸ்யமாக இரசிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

இதனால், உலகம்முழுவதும் சிஐஏவின் தில்லுமுல்லுத் திருவிளையாடல்கள் முழுவேகத்தில் அரங்கேறத் தொடங்கின - அமெரிக்க அரசின் பூரண ஆசிர்வாதத்துடன்!

### 4. குழம்பிய குட்டைகள், கொழுத்த மீன்கள்

இரண்டாம் உலகப் போர்க் கால கட்டத்தில், ஹிட்லருடன் துணையாக நின்ற மிகச் சில ஆட்சியாளர்களில் ஒருவர் முசோலினி (Benito Mussolini).

இத்தாலியச் சர்வாதிகாரியான முசோலினி, போரில் ஹிட்லர் தோற்கடிக்கப்படுவதற்கு முன்பே பிடிபட்டு. கொல்லப்பட்டுவிட்டார். அதன்பிறகுதான், இத்தாலியில் குடியரசு மலர்ந்தது. மக்கள் கொஞ்சம் நிம்மதியாக மூச்சு விடத் தொடங்கினார்கள்.

அப்போதைய இத்தாலியின் அரசியல் களத்தில், மூன்று கட்சிகள் முக்கியமானவை- "DC" எனப்பட்ட குடியரசுக் கட்சி (Christian Democrats), இத்தாலிய சோஷலிஸ்ட் கட்சி (PSI) மற்றும் இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி (PCI).

இத்தாலியின் முதலாவது பொதுத் தேர்தலில், இந்தக் கட்சிகள் மூன்றும் தனித்துப் போட்டியிட்டன. யாருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இதனால், இந்த மூன்று கட்சிகளும் இணைந்து ஒரு கூட்டணி அரசு அமைத்தன. இந்தக் கூட்டணிக்குக் குடியரசுக் கட்சி தலைமை தாங்கியது. மற்ற இரண்டு கட்சிகளுக்கும் சில மந்திரி பதவிகள் தரப்பட்டிருந்தன.

இந்தக் கூட்டணி ஆட்சி. நெடுநாள் நீடிக்கவில்லை. பல அரசியல் பிரச்சினைகளால், PCI மற்றும் PSI கட்சிகளை ஆட்சியிலிருந்து வெளியேற்றிவிட்டது குடியரசுக் கட்சி.

இதனால் எரிச்சலடைந்த இந்த இரு கட்சிகளும், தனிக் கூட்டணி அமைத்துக்கொண்டார்கள். குடியரசுக் கட்சியின் ஆட்சிக்கு நெருக்கடி கொடுக்க ஆரம்பித்தார்கள்.

கிட்டத்தட்ட சம பலம் உள்ள மூன்று கட்சிகளில், இரண்டு பேர் மட்டும் இணைந்துவிட்டால் என்ன ஆகும்? அவர்களுடைய பலம் அந்த மூன்றாவது கட்சியைக் காட்டிலும் அதிகமாகிவிடும்.

இத்தாலியில் அதுதான் நடந்தது. ஆளுங்கட்சியைவிட, எதிர்க்கட்சிகள் பலம் வாய்ந்தவையாகிவிட்டன. இதனால் ஏகப்பட்ட அரசியல் குழப்பங்கள்.

இப்படி ஒரு சூழ்நிலையில், 1948ஆம் ஆண்டு, இன்னொரு பொதுத் தேர்தல் வந்தது. இந்த முறை, குடியரசுக் கட்சி தனித்துப் போட்டியிட்டது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் துறை...

மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் உஷானி உமங்கா நேற்று சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ஆகியவற்றின் வேறுபாடுகள் குறித்து ஏற்கெனவே விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

EPF நிதியை ஓய்வூதியமாக மாற்றப்போவதாகத்தான் கூறவில்லை எனவும், அது சமூகப் பாதுகாப்புக்காகவே உள்ளதாகவும் அவர் கூறினார்.

EPF நிதியைக் குறைக்காமல் அல்லது மாற்றாமல், தனியார் துறை ஊழியர்களுக்குத் தனியானதொரு ஓய்வூதிய முறையை வழங்குவது குறித்தே அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது என அவர் கூறினார். (ம-7)

## ஆலய சூழலில்...

கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு பெரிய போரதீவைச் சேர்ந்த 60 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் சடலத்தைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## யாழ்.சர்வதேச...

கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து லங்கா எக்சிபிசன் அண்ட் கொன்பரன்ஸ் சர்வீசஸ் நிறுவனம் இக்கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தது.

இக்கண்காட்சியின் தொடக்க விழாவைத் தொடர்ந்து, விருந்தினர்கள் மங்கல வாத்தியங்களுடன் யாழ். முற்றவெளி மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கு நாடா வெட்டி கண்காட்சிக் கூடங்கள் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஆளுநர் மற்றும் விருந்தினர்கள் வர்த்தகக் கூடங்களைப் பார்வையிட்டனர்.

இக்கண்காட்சியில் 400 இற்கு மேற்பட்ட வர்த்தகக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ சாய் முரளி, யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன், லங்கா கண்காட்சி மற்றும் மாநாட்டுச் சேவைகள் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அர்ஜூன் தர்மதாச மற்றும் பணிப்பாளர் ஏ.எம்.எம். பாரூக், யாழ்ப்பாண வணிகர் மற்றும் கைத்தொழில் மன்றத்தின் தலைவர் குலசிங்கம் வசீகரன், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கே.விக்னேஷ், லங்கா கண்காட்சி மற்றும் மாநாட்டுச் சேவைகள் நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட முகாமையாளர் இமால்கா முல்லேகம, வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் அனுசரணை நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7)

## நம்பிக்கையில்...

பார்த்து நேரடியாகக் கேள்வி எழுப்பினர்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய பிரதமர் ஹரிணி அமரசூரிய,

நான் வந்துட்டேன்... எங்கே அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை?

"ஜனாதிபதியை பதவி நீக்க முடியாததனால் பிரதமரைப் பதவி நீக்க முனைந்தீர்கள், இன்று (நேற்று) காலையே நாட்டுக்கு வந்த நான், நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள ஓடோடி வந்தேன். ஆனால் அதனைக் காணவில்லையே" என சிரிப்பொலியுடன் பேசினார்.

அத்துடன் நீங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து நேரத்தை வீணடிக்க வேண்டாம். என்னைத் தெரிவுசெய்த நாட்டுமக்கள் வீட்டுக்குப் போகச் சொன்னால் நானாகவே போவேன் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## கிளிநொச்சியில்...

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் மீதான இந்த ஆண்டிற்கான விசாரணைகள் கிளிநொச்சியில் நேற்று (23) ஆரம்பமாகின.

நேற்று முன்தினம் வவுனியாவில் விசாரணை அதிகாரிகளுக்கான விசேட செயலமர்வு நீதியமைச்சர் தலைமையில் நடைபெற்றதைத் தொடர்ந்து, நேற்று கிளிநொச்சியில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் கிளிநொச்சி பிராந்திய காரியாலயத்திற்கு கிடைக்கப்பெற்ற 112 முறைப்பாடுகள் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவர், சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த தலைமையில் மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-7)

## நாட...

சாலைகளில் நேற்றைய தினம் அவசர மருத்துவ சேவைகள் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டன. வெளி நோயாளர் பிரிவு உள்ளிட்ட எந்தச் சேவைகளும் இடம்பெறவில்லை. இதனால் பெருமளவான மக்கள் வைத்தியசாலைகளுக்குச் சென்று அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

எவ்வாறிருப்பினும் சிறுவர் வைத்தியசாலைகள், மகப்பேற்று வைத்தியசாலைகள், புற்றுநோய் சிகிச்சைகள், சிறுநீரக சிகிச்சைப் பிரிவுகள், முப்படை வைத்தியசாலைகள் மற்றும் அங்கொட தேசிய மனநல வைத்தியசாலை என்பவற்றில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

எவ்வாறிருப்பினும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இந்த வேலைநிறுத்த போராட்டம் நியாயமற்றது என பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார். "மருத்துவர்களில் சிறு பிரிவினரே இவ்வாறு வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்பாலான வைத்தியசாலைகளின் விடுதிகளில் சேவைகள் வழமை போன்று முன்னெடுக்கப்பட்டன. இது உண்மையில் நியாயமற்றதொரு போராட்டமாகும். சுகாதாரத்துறை சார்ந்த எந்தவொரு வேலை நிறுத்தப் போராட்டத்தையும் நியாயப்படுத்த முடியாது.

எனவே இவ்வாறான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதை தடுப்பதற்கு ஆட்சியாளர்கள் என்ற ரீதியில் எமக்கும் பொறுப்பிருக்கிறது. அதே போன்று தொழிற்சங்கங்களுக்கும் அந்தப் பொறுப்பிருக்கிறது. இந்த வேலை நிறுத்தத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் நியாயமற்றவையாகும் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2026.01.23 — சீட்டிழுப்பு இலக்கம் 6083 — F 5 6 8 4 2 2
அத சம்பத — F 8 4 2 2 — சீட்டிழுப்பு இலக்கம் 658
சுப தவசக் — திகதி 2026.01.23 — சீட்டிழுப்பு இலக்கம் 190 — துலாம் 11 61 65 — 1964
தன நிதானய — திகதி - 2026.01.23 — சீட்டிழுப்பு இலக்கம் - 2113 — F 17 23 38 44 F
மெகா பவர் — திகதி 23/01/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2431 — D 04 09 12 37 66
ஜய — திகதி 2026.01.23 — சீட்டிழுப்பு இலக்கம் 0351 — R 5 4 8 2
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4325 — சீட்டிழுப்பு திகதி 23.01.2026 — E 01 65 72 79 — E
HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.01.23 — சீட்டிழுப்பு இலக்கம் 1392 — மேடம் 02 36 52 53 மேடம்
சுபிரி வாசனா — 23.01.2026 — வெற்றி வாரம் 0791 — W 0 7 7 5 1 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,599,286.80
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3057 — சீட்டிழுப்பு திகதி 2026.01.23 — தினம் வெள்ளிக்கிழமை — 01 04 08 64 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 92,145,860.00
சனிதா — திகதி 23.01.2026 — வெற்றி வாரம் 5218 — 04 23 68 74 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,067,690.80
சசிரி — வெற்றி வாரம் 887 — சீட்டிழுப்பு திகதி 23.01.2026 — வெள்ளிக்கிழமை — 24 28 36 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,594,920.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4769 — சீட்டிழுப்பு திகதி 23.01.2026 — தினம் வெள்ளிக்கிழமை — 14 16 47 55 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,682,567.20
லக்பிம — 2233 — 23.01.2026 — X 26 05 16 58 61 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.622,918,514.80
அட கோடிபதி — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2883 — சீட்டிழுப்பு திகதி 2026.01.23 — 02 45 48 58 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,477,416.80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவ மற்றும் கணக்கியல் உதவியாளர்கள் தேவை (பெண்கள்)

29.01.2026 மற்றும் 30.01.2026 திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் ஆவணங்களுடன் வருகை தரவும்.

01. க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருக்க வேண்டும்.(Result Sheet பிரதி )
02. பிறப்பு சான்றிதழ் பிரதி.
03. ஆள் அடையாள அட்டைப் பிரதி.
04. வயதெல்லை :- (21-30)
05. கிராம சேவகர் நற்சான்றிதழ் மூலப்பிரதி.

குறிப்பு:- தகமைக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (C-4858)

**758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5102**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3Kg |
| 1Kg கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 260/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 225/= | |
| 1Kg சர்க்கரை | - 235/= | |
| 1Kg றவை | - 282/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2670/= | Max 01 |
| 1Kg கடலை | - 352/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 255/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~90/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 160/= | ~~240/=~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:-
happy basket.lk இனை நாடவும். (1971)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. **0777 8080 30**

## A/L- வரலாறு

மாவட்ட, தேசிய சாதனைகளை பலமுறை உருவாக்கிய உங்கள் ஆசிரியர்

**M.பத்மன்**
B.A(Hons) History, M.A (History) M.E.D

கற்பிக்கும் இடங்கள்

**D.M.I** - ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
உயர்கலைக் கல்லூரி - குளப்பிட்டி, கொக்குவில்.
**BITSMANS** - மானிப்பாய்

A/L 2K26 - புதிய அனுமதிகள் வழங்கப்படும் (இறுதிச் சந்தர்ப்பம்)
A/L 2K27 - புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (C-4873)

D.M.I நிறுவனத்தில் A/L - 2K27 Batch இரு பிரிவுகளாக
பிரிவு – I சனி, ஞாயிறு 10 – 11 am,
பிரிவு – II சனி, ஞாயிறு 11 – 12 am

தொடர்புகளுக்கு :
**077 482 5587**


## தவறிவிட்டது

சண்முகம் ஜெகதீஸ்வரன் (663544080v) ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம் யாழ். நாவலர் வீதிக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (6634)

**தொடர்பு:077 773 3231**

## விற்பனைக்கு

எம்மிடம் 20 அடி நீளமுள்ள இரண்டு கண்டேனர்கள் (Container) விற்பனைக்குண்டு.



ஆர்க். என். கம்பனி, 150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (6644)
**021 222 4021**
**077 4433 708, 071 5357 803**

## மலிவு விலையில்

**பாடசாலை மாணவர்களுக்கான காலுறைகள்**




மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு (C-4870)
**076 315 6470**

**ஸ்ரீமுருகன்** No,303, K.K.S Road, Jaffna.

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் - ஆயாக்கடவை பிள்ளையார் கோயில் அண்மையில் நல்ல செம்மண் வளமுள்ள நன்றாகப் பராமரிக்கப்பட்ட காணித்துண்டுகள் 4 பரப்பு. 3 ¾ பரப்பு விற்பனைக்குண்டு.வீடு கட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் ஏற்ற காணி. (6645)

**தொடர்பு:077 129 8159**

## GLUCK GLOBAL PVT LTD
## வேலைவாய்ப்புகள்

**வட மாகாணத்தில் விரிவடையும் முன்னணி கல்வி சேவை நிறுவனம் யாழ்ப்பாணத்தில் 5 பேர் கொண்ட குழுவை நாம் உருவாக்குவோம்.**

**ஏன் Gluck Global இல் இணைய வேண்டும்?**

✓ வடமாகாணத்தில் முன்னணி கல்வி நிறுவனங்களுடன் நம்பகமான கூட்டணி
✓ விரிவான பயிற்சி மற்றும் தொழில் வளர்ச்சி
✓ கவர்ச்சிகரமான கமிஷன் கட்டமைப்பு
✓ தொழில்முறை பணி சூழல்
✓ வளர்ச்சி வாய்ப்புகள்

**வேலைகள்**

**1. தொழில் மேலாளர் (வாடிக்கையாளர் உறவு குழு மேலாளர்**
**1 பதவி / சம்பளம் ரூபா 2,00,000 + கமிஷன்**

**தகைமைகள்**

- தொழில் ஆலோசனை, கல்வி வழிகாட்டல் அல்லது மாணவர் வழிகாட்டலில் 3-5 ஆண்டு அனுபவம்
- கல்வி நிறுவனங்களுடன் உறவுகளை உருவாக்கும் திறன்
- குழு தலைமை மற்றும் பயிற்சி அனுபவம்
- தமிழ், ஆங்கிலத்தில் சிறந்த தொடர்பாடல்

**பொறுப்புகள்**

- 5 பேர் கொண்ட குழுவை வழிநடத்துதல்
- பள்ளிகள், கல்லூரிகள், தொழில் மையங்களில் உறவுகளை வளர்த்தல்
- மாணவர்கள், பெற்றோர்களுக்கு கல்வி பாதைகள் மற்றும் சேவைகள் குறித்து வழிகாட்டுதல்
- மாதாந்த இலக்குகளை அடைதல்

**2. தலைமை கல்வி, தொழில் ஆலோசகர்**
**2 பதவிகள் / சம்பளம் ரூபாய் 1,00,000 + கமிஷன்**

**தகைமைகள்**

- தொழில் ஆலோசனை, மாணவர் வழிகாட்டல் அல்லது கல்வி ஆலோசனையில் 2-4 ஆண்டுகள் அனுபவம்
- வலுவான ஆலோசனை திறன்கள் (தேவை மதிப்பீடு தீர்வு பரிந்துரை)
- குழுக்களுக்கு (மாணவர்கள், பெற்றோர்கள் கல்வியாளர்கள்) விளக்கக் காட்சி வழங்கும் அனுபவம்
- விற்பனை இலக்குகள் மற்றும் செயல்திறன் அளவீடுகள்
- தொழில் முறை தகுதி

**பொறுப்புகள்**

- மாணவர்கள், பெற்றோர்களுக்கு கல்வி சேவைகள் குறித்து ஆலோசனை
- பள்ளிகள் மற்றும் நிறுவனங்களில் விளக்கக்காட்சிகள் நடத்துதல்
- வருங்கால வாடிக்கையாளர்கள் குழாமை உருவாக்குதல்
- வாடிக்கையாளர் இலக்குகளை அடைய உதவுதல்

**3. உப கல்வி, தொழில் ஆலோசகர்**
**பதவிகள் / சம்பளம் ரூபா 60,000 + கமிஷன்**

**தகைமைகள்**

- தொழில் வழிகாட்டல் மாணவர் ஆலோசனை அல்லது வாடிக்கையாளர் தொடர்பு பாத்திரங்களில் 1 - 2 ஆண்டுகள் அனுபவம்
- வலுவான தொடர்பு மற்றும் தனிப்பட்ட திறன்
- விற்பனை மற்றும் ஆலோசனைகளை கற்பதில் விருப்பம்
- தமிழ் ஆங்கிலத்தில் சரளமாக தொடர்பாடும் திறன்

**பொறுப்புகள்**

- மூத்த ஆலோசகர்களுக்கு வாடிக்கையாளர் சந்திப்புகளில் ஆதரவு வழங்குதல்
- பின்தொடர்தல் அழைப்புகள் மற்றும் சந்திப்புகளை நடத்துதல்
- CAM தரவுத்தளத்தை பராமரித்தல்
- மாதாந்த செயல்பாடு மற்றும் இலக்குகளை அடைதல்

**4. பயிற்சியாளர் (விற்பனை பயிற்சியாளர்)**
**பதவி / சம்பளம் ரூபா 20,000**

**தகைமைகள்**

- அனுபவம் தேவையில்லை (புதிய பட்டதாரிகள் வரவேற்கப்படுகிறார்கள்)
- கற்றுக்கொள்ளும் விருப்பம் மற்றும் உந்துதல்
- அடிப்படை தொடர்பாடல் திறன்கள்
- தமிழ் ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு

**பொறுப்புகள்**

- மூத்த குழு உறுப்பினர்களுடன் பணியில் பயிற்சி
- வாடிக்கையாளர் தரவுத்தள மேலாண்மை
- தொலைப்பேசி அழைப்புகள் மற்றும் சந்திப்பு ஒருங்கிணைப்பு
- விற்பனை செயல்முறைகளை கற்றல்

**5. உள்ளடக்க உருவாக்குனர் (CONTENT CREATOR)**

சம்பளம் ரூபா. 50,000 முதல்
வயது 20 முதல் 30
பாலினம் - பெண்

**தகைமைகள்**

- நடிப்பு மற்றும் விளக்க காட்சிகளை வழங்குதல்
- தமிழ் ஆங்கிலம் தொடர்பாடல் திறன்
- உள்ளடக்கம் எழுதுதல் (Script)
- ஒளிப்படக்கருவி (Camera) அல்லது கைப்பேசியில் காட்சி பதிவு செய்யும் திறன் இருத்தல்

**பொறுப்புகள்**

- காட்சிகளுக்கான உரைகள் தயாரிப்பது
- வீடியோக்கள் உருவாக்குதல்
- நடித்தல் மற்றும் விளக்க காட்சிகளை பதிவு செய்வது

**நேர்முகத்தேர்வு**

**திகதி : 25.01.2026 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம்: காலை 10.00 பிற்பகல் 5.00**
**இடம் : NORTH GATE HOTEL, CONFERENCE ROOM, STATION ROAD, JAFFNA.**

**நீங்கள் கொண்டு வர வேண்டியவை:**

✓ புதுப்பிக்கப்பட்ட பயோடேட்டா (3 நகல்கள்)
✓ கல்விச் சான்றிதழ்கள் (அசல் + நகல்கள்)
✓ அனுபவ கடிதங்கள் / பரிந்துரைகள்
✓ தேசிய அடையாள அட்டை

(1969)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org